தமிழ்நாடு அரசு
சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை – கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கான தற்போதைய மாதாந்திர உண்டி, உறையுள் கட்டணங்களை உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் (சிந2) நலத்துறை**

அரசாணை(நிலை)எண்.59 நாள் 6.6.2000

திருவள்ளுவர் ஆண்டு 2031.
விக்கிரம, வைகாசி 24.
படிக்க :

அரசாணை(நிலை) எண்.55, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 9.3.90..

ஆணை :

பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில் கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு 1.3.90 முதல் மாதாந்திர உண்டி, உறையுள் தொகை பின்வருமாறு திருத்தி வழங்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | சென்னை நகரம் | மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | கலை, அறிவியல் மற்றும் சட்டம் | 80 | 70 |
| 2. | தொழில் நுட்பக் கல்வி (பொறியியல், விவசாயம், கால்நடை, மருத்துவம் சார்ந்த படிப்புகள்). | 85 | 80 |
| 3. | தொழிற் பயிற்சி மற்றும் தொழிற் நுட்பப் பயிற்சிகள். | 70 | 60 |

தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் மாநில அரசு கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு கீழ்வருமாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | மாதம் ஒன்றுக்கு ரூபாயில் |
|---|---|---|
| 1. | தொழிற் கல்வி | 140 |
| 2. | பட்டயப் படிப்பு மற்றும் ஐ.டி.ஐ. | 90 |
| 3. | முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் அறிவியில் இளங்கலை. | 90 |
| 4. | இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் +1, +2. | 80 |

2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு இதுநாள் வரையில் உண்டி, உறையுள் கட்டணம் உயர்த்தப்படாமல் உள்ளதால் மாணவர்கள் பெரும் சங்கடங்களுக்கு உள்ளாகி தொடர்ந்து கல்வி பயில இயலாமல் இடையில் நிறுத்தியும் வருகின்றனர். இத்தகைய நிலையை போக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் மாணவர்களுக்கு வழங்கப்படுவது போல் இத்துறையிலும் ஏற்கனவே உள்ள கட்டணங்களை உயர்த்தி வழங்குவது அவசியம் என கருதப்படுகிறது.

3. 11.5.2000 அன்று சட்டமன்றப் பேரவையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக் கோரிக்கை நிறைவேற்றப்படும் போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப்பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திர உண்டி. உறையுள் கட்டணம் கீழ்வருமாறு உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

| விவரம் | தற்போதைய நிலை | உயர்த்தப்பட்ட கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| தொழிற்கல்வி | 80 | 140 |
| பட்டயப்படிப்பு | 60 | 90 |
| அறிவியல், இளங்கலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு. | 70 | 90 |
| +2 மற்றும் இளங்கலை பட்டப் படிப்பு. | 60 | 80 |

4. இவ்வறிப்பினைத் தொடர்ந்து இச்செயற்குறிப்பு அரசால் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை இயக்குநருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்படுகிறது. அதன்படி, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திர உண்டி, உறையுள் கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படுகின்றன.

| விவரம் | தற்போதைய நிலை | உயர்த்தப்பட்ட கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| தொழிற்கல்வி | 80 | 140 |
| பட்டயப்படிப்பு | 60 | 90 |
| அறிவியல், இளங்கலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு. | 70 | 90 |
| +2 மற்றும் இளங்கலை பட்டப் படிப்பு. | 60 | 80 |

இத்திட்டத்திற்காக ரூ.52.07/- இலட்சம் கூடுதல் செலவினமாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. இந்த கூடுதல் செலவினம் குறித்த விவரம் இந்த ஆணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

‘‘2225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் - 03.பிற்படுத்தப்பட்டோர் நலன் - 277.கல்வி - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - மிமி மாநிலத் திட்டம் - BI .மெட்ரிக்குலேசனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை -- 12.படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்.

(த.தொ.கு.எண்.2225 03 277 BI 1205). மற்றும்

‘‘2225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன் - 80.பொது - 101.சீர்மரபினர் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் - - ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - மி மி மாநிலத் திட்டம் - யிசி.மெட்ரிக்குலேசனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் சீர்மரபு

மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை -- 12.படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்.

(த.தொ.கு.எண்.2225 03 277 யிசி 1207).

6. இந்தச் செலவினம் புது துணைப்பணி குறித்த செலவினமாகும் (New Instrument of Service). இதற்குச் சட்டமன்ற ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற நிதி (வரவு செலவு -- மி) துறையில் தனியாக ஆணைகள் வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இரு படிகளில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். நடப்பு நிதியாண்டிற்கான (2000-2001) திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் இதனைச் சேர்ப்பதற்கான கருத்துருவை அரசு (நிதித்துறை)க்கு அனுப்புமாறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.76/னுளு(குஊ)/2000, நாள் 2.6.2000 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்,
அரசு செயலர்.

பெறுநர்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை-5.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநில கணக்காயர்(தணிக்கை-1), சென்னை-18(பெயரில்).
மாநில கணக்காயர்(தணிக்கை.2), சென்னை-35(பெயரில்).
மாநில கணக்காயர்(தணிக்கை.2), சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5.

நகல் :

நிதித்(ளுறு/கூஷமு)துறை, சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

(ஆணைப்படி/அனுப்பப்படுகிறது)

| படிப்புப் பிரிவின் பெயர் | தற்போதைய கட்டணம் | | மாணவர்களின் எண்ணிக்கை | | திருத்தி அமைக்கப்பட்ட கட்டணம் | தற்போதைய நிலவரப்படி செலவு | திருத்தி அமைக்கப்பட்ட நிலவரப்படி செலவு | வேறுபாடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நகரம் | வெளியூர் பகுதி | நகரம் | வெளியூர் பகுதி | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1.தொழிற்கல்வி | 85 | 80 | 160 | 3640 | 140 | 30.48 | 53.20 | 22.72 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2.பட்டயப்படிப்பு | 70 | 60 | 640 | 6960 | 90 | 46.24 | 68.40 | 22.16 |
| 3. அறிவியல் இளங்கலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு. | 85 | 80 | 190 | 2660 | 90 | 22.90 | 25.65 | 2.75 |
| 4.+2 மற்றும் இளங்கலை பட்டப்படிப்பு. | 80 | 70 | 315 | 4435 | 80 | 33.56 | 38.00 | 4.44 |
| மொத்தம் | | | | | | | 52.07 | |